(ஆ) ஆம் எனில், அந்த இணைப்புப் பாதையை இலவசமாக நகராட்சிக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலம் 'வாய்க்கால் புறம்போக்கு' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே நகராட்சிக்கு இந்நிலத்தை இலவசமாக வழங்க இயலாது.

507—

கால்நடை மருந்தகங்களுக்கு மருந்து வழங்குதல்

*** 35756**—*திரு. கே. ஏ. மனோகரன்:*

திரு. மு. வெங்கடராம ரெட்டி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோடைகாலத்தில் வரும் Foot and Mouth வியாதிகளுக்கு இங்குள்ள அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் இன்மையால் உடனடியாக அம்மருத்துவமனைகளுக்கு மருந்துகள் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடைகளுக்கு கோடைகாலங்களில் வரும் கால் மற்றும் வாய் நோய்களுக்கு உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம் அரசு மருத்துவமனைகளில் போதிய மருந்து கையிருப்பில் வைக்கும்பொருட்டு, நடப்பாண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும் 10,000 டோஸ்கள் கால் மற்றும் வாய் நோய்த் தடுப்பு மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

508—

பாண்டி வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுதல்

***22583**—*திரு. வீ. சுப்பிரமணியன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—